OS No. 3/2015

Date : 28.08.2019

*வாசா.1* திருமதி ரேவதி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -**

எனது பாட்டியின் பெயர் ராஜேஸ்வரி. எனது தாத்தா பெயர் சிவசாமி. எனது தாயாருடன் பிறந்தவர்கள் ஞானேஸ்வரி, பரமேஸ்வரி மற்றும் சிவராம். எனது தாயாருக்கு 1981-ல் திருமணம் நடந்தது. எனது பெரியம்மா ஞானேஸ்வரியின் திருமணம் எப்பொழுது நடந்தது என்று எனக்கு தெரியாது. அதேபோன்று எனது சித்தி பரமேஸ்வரியின் திருமணம் எப்பொழுது நடந்தது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண்.509 ஆகும். தாவா சொத்தின் தெற்கு பகுதி நடைபாதையாக உள்ளது. தாவா சொத்தின் வடக்கு பகுதியில் தற்போது என்ன உள்ளது என்று தெரியாது. ஆனால் அதற்கு முன்பு ஒரு ஜின்னிங் பேக்டரியின் சுற்று சுவர் இருந்தது. எனது திருமணத்திற்கு முன்பு வரை தாவா சொத்தின் நான்கு மால்கள் எனக்கு தெரியும். தற்பொழுது என்ன நிலவரம் என்று தெரியாது. 5 வருடங்களுக்கு முன்பும் தாவா சொத்தின் வடக்கு பகுதியில் ஜின்னிங் பேக்டரி தான் இருந்தது. தாவா சொத்தின் கிழக்கு பகுதியில் எனக்கு சிறுவயதாக இருக்கும்போது குளறுமணி என்பவரது இடம் இருந்தது. 5 வருடங்களுக்கு முன்பு ஆறுமுகம் வாத்தியார் என்பவர் இடம் இருந்தது. தாவா சொத்தின் மேற்கு பகுதியில் எனக்கு தெரிந்தவரை வள்ளியம்மாள் என்பவரிடம் இருந்தது. தற்போது யாரிடம் உள்ளது என்று தெரியாது. அரசு மதிப்பீட்டின் அடிப்படையில் தாவா சொத்தின் மதிப்பு கணக்கிட்டு போடப்பட்டுள்ளது. அதற்கு ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம். நான் கூறுவது தவறு என்றும் மதிப்பீட்டிற்காக ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை தற்போது உயிரோடு தான் இருக்கிறார். தாவா சொத்து எனது பாட்டிக்கு பாத்தியப்பட்டது என்ற அடிப்படையில் நான் உரிமை கோருகிறேனா, எனது தாயாருக்கு

பாத்தியப்பட்டது என்ற அடிப்படையில் நான் உரிமை கோருகிறேனா என்றால் இரண்டு வழியிலும் கோருகிறேன். எனது அம்மாவின் வாரிசாக எனது தந்தை, நான் மற்றும் எனது தம்பி இருக்கிறோம். எனது அம்மாவின் வாரிசு என்ற அடிப்படையில் எனது தகப்பனாருக்கும் தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது தந்தையை ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். எனது தந்தையின் சம்மதத்தோடு தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்தேன். எங்கள் இருவரையும் வழக்கு போடுமாறு கூறியதால் நானும் எனது தம்பியும் வழக்கு தாக்கல் செய்தோம். தேவைப்பட்டால் எனது தந்தை வழக்கில் ஆஜராக தயாராக இருக்கிறார். எனது தந்தையை தரப்பினராக இந்த வழக்கில் நான் சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை 31.10.1974-ல் எனது பாட்டி கிரையம் பெற்றார். கிரையம் வாங்கும்பொழுது அது காலியிடமாக இருந்தது. எனது தாயாரின் திருமணத்தின்போது 1981-ல் அந்த இடத்தில் வீடு கட்டப்பட்டது. எனது பிராதிலோ, முதல் விசாரணையிலோ மேற்சொன்ன விபரத்தை நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த வீட்டை எனது பாட்டிதான் கட்டினார். அவருக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைக்க வேண்டிய சொத்திற்கு பதிலாக, பணத்தை அவரது பெற்றோரிடம் வாங்கி அந்த வீட்டை கட்டினார். அந்த விபரத்தை நான் எனது பிராதிலோ, முதல் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரிதான். அதற்குரிய ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது பாட்டிதான் அவரது தொகையைக்கொண்டு அந்த வீட்டை கட்டினார் என்ற விபரம் எனது பாட்டியும், எனது உறவினர்களும் கூறிதான் எனக்கு தெரியும். எனக்கு தற்பொழுது 34 வயதாகிறது. நான் 9 அல்லது 10ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும் பொழுது அந்த விபரத்தை தெரிந்துகொண்டேன். எனது தாயார் எனது திருமணத்திற்கு பின்னிட்டு 19.10.2010-ல் காலமானார். எனது பாட்டி

26.3.2012-ல் இறந்தார். எனது தாயார் இறந்ததற்கு பின்னிட்டு எனது பாட்டியை நான் தான் தாவா சொத்தில் வந்து பார்த்துக்கொண்டேன். எனது பிராதிலோ, முதல் சாட்சியத்திலோ மேற்சொன்ன விபரத்தை கூறியுள்ளேனா என்று எனக்கு நினைவில்லை. நானும் எனது தம்பியும் சேர்த்தும் தான் எங்களது வழக்கறிஞரிடம் வழக்கு சம்பந்தப்பட்ட விபரத்தை கூறினோம். எனது பிராதில் சொல்லப்படாத பல விபரங்களை நான் தற்போது எனது சாட்சியத்தில் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது சித்தி மற்றும் பெரியம்மாவிடம் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை நல்ல உறவில் தான் இருந்தோம். ஆனால் இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு போக்குவரத்து இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு நான் தாவா சொத்திற்கு போய் வந்துள்ளேன். பாட்டி வீட்டில் தற்போது வள்ளிராஜ் மற்றும் தமிழரசி இருவரும் குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் இருவரும் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு குடி வந்தார்கள். எனது தாத்தா இறந்தபின் அவர்கள் குடிவந்தார்கள். குறிப்பாக எந்த வருடம் என்று எனக்கு தற்போது நினைவில்லை. எனது வழக்கறிஞர் 29.11.2014-ல் அறிவிப்பு அனுப்பினார். வாசாஆ.9 மற்றும் 10 வழக்கறிஞர் அறிவிப்புக்கு பின்னிட்டு வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதற்கு முன் உள்ள ஆவணங்களும் நாங்கள் தான் கட்டினோம். ஆனால் அந்த ஆவணங்கள் எனது தாத்தவிடம் இருந்தன. வாசாஆ.14 மற்றும் 15 ஆவணங்கள் வழக்கு நிலுவையில் இருந்து, வழக்கு விசாரணையில் இருந்த சமயத்தில் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். வாசாஆ.9,10,14 மற்றும் 15 ஆவணங்கள் வழக்கிற்காக வாங்கப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. குடிநீர் கட்டண ரசீதோ, வீட்டு வரி ரசீதோ யார் வேண்டுமென்றாலும் கட்டலாம் என்றால் சரிதான். வாசாஆ.9,10,14,15 ரசீதுகள் எனது பாட்டியின் பெயரில் தான் தற்போதும் உள்ளது என்று சொன்னால் சரிதான். செலுத்தியவர் என்ற பெயரில்

எனது பெயர் காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தை நான் எந்த காலத்திலும் கூட்டாக அனுபவத்தில் இல்லை என்றும், மேற்குறிப்பிட்ட 4 ஆவணங்களும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. எனது திருமணத்திற்கு பின்னிட்டு நான் பொள்ளாச்சியில் குடியிருந்து வருகிறேன். எனது தம்பியும் பொள்ளாச்சியில் தான் குடியிருந்து வருகிறார். அவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. நானும் எனது தம்பியும் தாவா சொத்தில் என்றைக்கும் கூட்டாக அனுபவத்தில் இருந்ததில்லை என்றும், பணம் பறிக்கும் நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் நான் குடியிருந்தேன் என்று காட்டுவதற்கு என்னிடம் எல்ஐசி பாலிசி உள்ளது. தேவைப்பட்டால் அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நீதிமன்ற கட்டணத்தை குறைத்து கட்டுவதற்காக தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக தவறான ஒரு கருத்தை குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பாட்டி ராஜேஸ்வரி முதல் பிரதிவாதியின் மகன் சூர்யா பெயரில் உயில் எழுதிய விபரம் எனக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கு தெரியாது. உயில் விபரம் எனது தாத்தா இறந்த சமயத்தில் எனக்கு தெரியாது. எனது பாட்டி ஓரளவுக்கு தமிழ் எழுதப்படிக்கத் தெரியும். ஆனால் சற்று மனநிலை சரியில்லாமல் இருந்தார். எனக்கு விபரம் தெரிந்த வரை எனது பாட்டியை சந்தர்ப்பந்திற்கு தகுந்தவாறு சங்கிலி போட்டு தான் கட்டி வைத்திருப்பார்கள். எனது பாட்டி தமிழில் தான் கையொப்பம் செய்வார். எனது பாட்டியின் கையெழுத்தை நான் நிறைய முறை பார்த்துள்ளேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ளது எனது பாட்டியின் கையொப்பம் இல்லை. எனக்கு எனது தாத்தாவின் கையெழுத்து தெரியாது. எனது சித்தி பரமேஸ்வரியின் கையெழுத்தை நான் பார்த்ததில்லை. எனது பாட்டி 8ஆம் வகுப்பு படித்துள்ளதாக நான்

கேள்விப்பட்டேன். சரியாக எனக்கு தெரியாது. எனது பாட்டியின் கையெழுத்து பிரதிகள் என்னிடம் ஏதாவது உள்ளதா என்றால், எனது அம்மாவின் பள்ளி மாற்றுச்சான்றிதழில் இருக்கலாம். அதை பார்த்து தான் எடுக்கவேண்டும். நான் சிறுவயதாக இருக்கும்பொழுது அவரது மருத்துவ ஆவணங்களில் அவரது கையெழுத்தை பார்த்துள்ளேன். ஆனால் தற்போது அந்த ஆவணம் எதுவும் என்னிடமில்லை. உயிலில் உள்ள கையொப்பம் எனது பாட்டியின் கையொப்பம் இல்லை என்று, நான் எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால், எனது பாட்டியின் கையொப்பத்தை நான் நிறைய தடவை பார்த்துள்ளதால் அந்த கையொப்பம் எனது பாட்டியின் கையொப்பம் இல்லை என்ற கூறுகிறேன். எனது பாட்டியின் கையொப்பத்தை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால், தேடிபார்த்தால் தான் நான் உறுதியாகக் கூறமுடியும். சூர்யா பெயரில் உயில் எழுதி, எனது சித்தி மற்றும் பெரியம்மாவுக்கு எனது பாட்டி பணம் கொடுத்ததாக கேள்விப்பட்ட காரணத்தினால் எனக்கும் பணம் வேண்டுமென்று இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை பணம் பறிக்கும் நோக்கில் தான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பாட்டி எழுதிய உயிலை பொறுத்து, Probate OP ஒன்று தாக்கல் செய்யப்பட்டு, அதில் உத்தரவான விபரம் எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு Probate OP தாக்கல் செய்து உத்தரவான விபரம் தெரியும். விபரம் தெரிந்த பின்னிட்டு Probate OP-ஐ ரத்து செய்வதற்கு நான் சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். Probate OP-ல் போடப்பட்ட உத்தரவை ரத்து செய்யாத பட்சத்தில் உயில் ஊர் ஜிதத்திற்கு வந்துவிட்டது என்றால் சரியல்ல. எனது பாட்டி சூர்யா பெயரில் உயில் எழுதிய விபரம் எனக்கு தெரியும் என்றும், ஆனால் அதை மறைத்து இந்த தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும்

சொன்னால் சரியல்ல. எனது வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் அனுப்பிய பதில் அறிவிப்பு அனுப்பிய விபரம் எனக்கு தெரியும். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எனக்கு தெரியும். அந்த பதில் அறிவிப்பில் 1ஆம் பிரதிவாதியின் மைனர் மகன் சூர்யா பெயரில் எனது பாட்டி உயில் எழுதியுள்ளதாக குறிப்பிடப்பட்ட விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். உயில் விபரத்தை தெரிந்து கொண்ட பின்னர் தான் அதை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காரணம் பதில் அறிவிப்பில் அவர்கள் தவறாகக் கூட குறிப்பிட்டிருக்கலாம். 1ஆம் பிரதிவாதியை அலைக்கழிக்க வேண்டுமென்று இந்த தாவாவை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதி நான் சிறுவயதாக இருக்கும் பொழுது ஆஸ்திரேலியாவில் டாடா கண்சல்டிங்கில் என்ஜினியராக இருந்து வந்தார். அவருடைய சம்பாத்தியத்தை கொண்டுதான் தாவா சொத்தில் வீடு கட்டப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதன் காரணமாகத்தான் எனது பாட்டி அந்த சொத்தை அவரது மகன் சூர்யாவிற்கு உயில் எழுதி வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தா இறந்த காலகட்டத்தில் உயிலில் சொல்லப்பட்டுள்ள எனது பாட்டியின் அசையும் சொத்துக்களை பொறுத்து, நான் எனது பெரியம்மா, எனது சித்தி ஆகியோர்கள் பெற்றுக்கொண்டு, அதை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் விபரம் எனக்கு தெரியும். அந்த எதிருரையில் 1ஆம் பிரதிவாதியின் மகன் சூர்யா மைனராக காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எதிருரை தாக்கல் செய்யப்பட்ட பின்னரும் சூர்யாவை இந்த வழக்கில் தரப்பினராக நான் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சூர்யாவை தரப்பினராக சேர்க்காததால் எனது தாவா நிலைக்கத் தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. சட்டப்படி எனது வழக்கு

நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் கோரும் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

Sd./ G. Vijaya
முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.